# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 22: தீர்க்கதரிசிகளைச் சோதித்தறிதல்

*1இராஜாக்கள் 22:1-40*

### நடந்த கதை . . .

துன்மார்க்க இஸ்ரவேல் ராஜாவான ஆகாப், ராமோத்-கீலேயாத் பட்டணத்தைச் சீரியர்களிடமிருந்து மீட்க விரும்பினான். யூதாவின் நல்ல ராஜாவான யோசபாத்தையும் தன்னோடு யுத்தத்திற்கு வரும்படி ஆகாப் கூப்பிட்டான். ஆகாபோடு செல்லும்முன் யோசபாத் முதலில் தேவ ஆலோசனையைக் கேட்க விரும்பினார்.

பாகாலை வணங்கிவந்த ஆகாப் பல வருடங்களாகத் தேவனைத் தேடவில்லை; தான் நியமித்திருந்த 400 தீர்க்கதரிசிகளையும் வரச் செய்தான். இந்தப் பொய்த் தீர்க்கதரிசிகள், "சீரியர்களோடு யுத்தத்திற்குச் செல்லும்; வெற்றி உமக்குத்தான்" என்று நடித்தார்கள். ஆனால், யோசபாத் ராஜா, ஆண்டவருடைய தீர்க்கதரிசி ஒருவரிடம் கேட்க விரும்பினார். மிகாயா என்பவன் மீதியாயிருக்கிறான் என்று ஆகாப் சொன்னான். 'நான் அவனைப் பகைக்கிறேன்; அவன் என்னைக்குறித்து நன்மையாக அல்ல, தீமையாகத் தீர்க்கதரிசனஞ்சொல்கிறவன்' என்றும் சொன்னான். வச 8.



யோசபாத் வற்புறுத்தவே, மிகாயாவை அழைத்துவரச் சொன்னான். துணிச்சல்மிக்க அந்தத் தீர்க்கதரிசி யாரும் விரும்பாத ஒரு செய்தியைச் சொன்னார். சீரியரோடான யுத்தத்தில் ஆகாப் மரிப்பானென்றார். ஆகாபுக்குக் கஷ்டகாலம். நல்ல செய்தி சொன்ன 400 தீர்க்கதரிசிகளை நம்புவதா? அல்லது, ஆண்டவரின் ஒரே ஒரு தீர்க்கதரிசியின் பேச்சை நம்புவதா?

ஆகாப் பிடிவாதமாக யோசபாத்திடம், மிகாயா தீர்க்கதரிசியின் எச்சரிப்புகளைப் புறக்கணித்து, தன்னுடன் யுத்தத்திற்கு வரும்படிக் கூறினார். படையின் முதல் வரிசையில் நிற்காமல், முற்றிலும் கவசம் அணிந்திருந்தால் தான் தப்பிவிடலாமென்றும் ஆண்டவரைப் பொய்யராக்கிவிடலாமென்றும் நினைத்தான். ஆனால், தேவ வார்த்தையிலிருந்து தப்பமுடியாது என்பதை ஆகாப் புரிந்துகொண்டபோது, எல்லாம் முடிந்துவிட்டது. யுத்தத்தின் போது, ஒருவன் நினையாமல் எய்த அம்பு, ஆகாபின் கவசத்தின் சந்துகளில்பட்டது; இரதத்திலேயே இறந்துபோனான்.

கடைசி நாட்களில் அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருப்பார்களென்று இயேசு எச்சரித்தார். மத்தேயு 24:11. அதனால்தான், பொய் எது, மெய் எது என்று அடையாளங்காண தெரிந்திருக்க வேண்டும். அது வாழ்வா சாவா பிரச்சனையாகும்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

### 1. ஆண்டவர் தம் இறுதித் திட்டங்களை யாருக்கு வெளிப்படுத்துவார்?

**ஆமோஸ் 3:7.** *கர்த்தராகிய ஆண்டவர் ____________ தம்முடைய ஊழி யக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.*

### 2. கடைசி நாட்களில் மெய்த் தீர்க்கதரிசிகளும் பொய்த் தீர்க்கதரிசிகளும் இருப்பார்களா?

**மத்தேயு 24:11.** *அநேகங் ____________ தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.*

**அப்போஸ்தலர் 2:17.** *கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ____________ ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் ____________ உங்கள் ____________ தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்.*

**குறிப்பு:** ஆம், கடைசிக்காலத்தில் மெய்த் தீர்க்கதரிசிகளும், பொய்த் தீர்க்கதரிசிகளும் இருப்பார்கள். ஆண்களிலும் பெண்களிலும் தீர்க்கதரிசிகள் இருக்கலாமென்று வேதாகமம் கூறுகிறது.

### 3. எப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளை வேதாகமம் குறிப்பாகக் கண்டிக்கிறது?

அ. *"குறிசொல்லுகிறவனும்" உபாகமம் 18:10.*

ஆ. *"நாள்பார்க்கிறவனும்" உபாகமம் 18:10.*

இ. *"அஞ்சனம்பார்க்கிறவனும்" உபாகமம் 18:10.*

ஈ. *"சூனியக்காரனும்" உபாகமம் 18:10.*

உ. *"மந்திரவாதியும்" உபாகமம் 18:11.*

ஊ. *"சன்னதக்காரனும்" உபாகமம் 18:11.*

எ. *"மாயவித்தைக்காரனும்" உபாகமம் 18:11.*

ஏ. *"செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும்" உபாகமம் 18:11.*

**குறிப்பு:** இவைகளையெல்லாம் செய்கிறவன் கர்த்தருக்கு 'அருவருப்பானவன்' என்று வேதாகமம் கூறுகிறது. அதனால்தான், இதில் எதையும் கிறிஸ்தவர்கள் செய்யக்கூடாது.

### 4. தேவனுடைய கடைசிக்காலச் சபையில் தீர்க்கதரிசன வரம் காணப்படுமா?

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங் கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், ____________ கிறிஸ்துவைக் குறித்துச் ____________ உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று.*

**வெளிப்படுத்தல் 19:10.** *உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி ____________ ____________.*

**குறிப்பு:** பாடம் 17இல் நாம் பார்த்ததுபோல, தேவனுடைய கடைசிக்காலச் சபையில் "இயேசுவைப் பற்றின சாட்சி" இருக்கும்; அது "தீர்க்கதரிசனத்தின் ஆவி". வெளி 19:10 ஐயும் வெளி 22:9 ஐயும் ஒப்பிட்டுப் பார்த்தால், யோவானின் 'சகோதரரை' அதாவது தீர்க்கதரிசன ஆவியுடையவர்களை "தீர்க்கதரிசிகள்' என்றும் "இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்கிறவர்கள்" என்றும் தூதன் சொல்லுகிறான். (ஆங்கில வேதாகமத்தில், 'உன் சகோதரராகிய தீர்க்கதரிசிகள்' என்றுதான் உள்ளது). 1கொரிந்தியர் 1:5–8இல், 'கிறிஸ்துவைப்பற்றிய சான்று' (பொதுமொழிபெயர்ப்பு) சபையில் இருக்குமென்றும், இயேசுவின் இரண்டாம் வருகைமட்டும் 'யாதொரு வரத்திலும் குறைவில்லாத(தாய்)' சபை இருக்குமென்றும் பவுல் கூறுகிறார். எனவே, தேவனுடைய கடைசிக்காலச் சபை தீர்க்கதரிசன ஆவியைப் பெற்றிருக்கிறது.



### 5. மெய்த் தீர்க்கதரிசியிடம் எவ்விதங்களில் தேவன் பேசுகிறார்?

**எண்ணாகமம் 12:6,8.** *உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் ____________ என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, ____________ அவனோடே பேசுவேன் ... ____________ பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்.*

**சகரியா 4:1.** *என்னோடே பேசின ____________ திரும்பி வந்த நித்திரைபண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் என்னை எழுப்பி,*

**குறிப்பு:** தரிசனங்கள், கனவுகள் மூலமாகவும், முகமுகமாகவும், தூதர்கள் மூலமாகவும் ஆண்டவர் தம் தீர்க்கதரிசிகளிடம் பேசுகிறார். மாயக்கண்ணாடி, பந்து, கைரேகை, தேயிலை இலை குறி பார்த்தல், நட்சத்திரம்பார்த்தல், மரித்தவர்களிடம் பேசுதல் போன்றவற்றின் மூலம் தேவன் தம் தீர்க்கதரிசிகளோடு பேசுவது கிடையாது.

### 6. ஒருவர் மெய்த் தீர்க்கதரிசி என்பதற்கு அற்புதங்கள்தாம் அத்தாட்சியா?

**வெளிப்படுத்தல் 16:14.** *அவைகள் ____________ செய்கிற ____________ ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் ... சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது.*

**குறிப்பு:** இல்லை. ஒருவர் மெய்த்தீர்க்கதரிசி என்பதற்கு அற்புதங்கள் ஒருபோதும் அடையாளம் இல்லை. அற்புதங்கள் அசாத்திய வல்லமைக்குமாத்திரமே சாட்சியாக இருக்கின்றன. அத்தகைய வல்லமை தேவனிடமிருந்து வரலாம்; சாத்தானிடமிருந்தும் வரலாம். அதனால்தான் ஆண்டவர், "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்று சொல்லுகிறார்.

### 7. தீர்க்கதரிசியை முக்கியமாக எப்படிச் சோதித்தறியலாம்?

**ஏசாயா 8:20.** ____________ *சாட்சி* ____________ *கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.*

**குறிப்பு:** 'வேதமும் சாட்சியாகமும்' என்பது 'வேதாகமம்' என்பதற்கான பழைய ஏற்பாட்டு வார்த்தையாகும். அதாவது, தேவன் சொன்னதாக ஒருவர் தீர்க்கதரிசனம் சொல்லும்போது அந்தச் செய்தியை வேதாகமத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். வேதாகமத்தை வைத்து தீர்க்கதரிசியைச் சோதிக்கவேண்டும்; தீர்க்கதரிசியை வைத்து வேதாகமத்தைச் சோதிக்கக்கூடாது. மெய்த்தீர்க்கதரிசியின் வார்த்தைகள் 100 சதவிகிதம் வேதாகமத்தோடு ஒத்திருக்கும். அது தான் உண்மையான பரீட்சை.

### 8. ஒரு தீர்க்கதரிசிக்கான இரண்டாவது சோதனை என்ன?

**1யோவான் 4:2.** *தேவ ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த ____________ ____________ அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.*

**குறிப்பு:** இயேசு கிறிஸ்துவானவர் மனிதனாக வந்த தேவன் என்பதை தேவனுடைய தீர்க்கதரிசி அறிந்திருக்கவேண்டும்; அந்த சத்தியத்தைப் போதிக்கவேண்டும். மெய்த்தீர்க்கதரிசிகள் தங்களை அல்ல, இயேசுவைத்தான் மேன்மைப்படுத்த வேண்டும். பொய்த்தீர்க்கதரிசிகள் பலர் தேவனுடைய வார்த்தையைவிட்டு மக்களின் கவனத்தைத் திருப்பி, தங்களுடைய கருத்துகளுக்குச் செவிசாய்க்க வைக்கிறார்கள்.

### 9. ஒரு தீர்க்கதரிசிக்கான மூன்றாவது சோதனை என்ன?

**மத்தேயு 7:16.** *அவர்களுடைய ____________ அவர்களை அறிவீர்கள்.*

**குறிப்பு:** அதற்காகத் தீர்க்கதரிசிகள் பாவமே இல்லாதவர்கள் என்று அர்த்தம் கிடையாது. தேவனுடைய தீர்க்கதரிசிகளிடம் குறைகள் காணப்பட்டிருக்கின்றன. ஆனாலும், மெய்த்தீர்க்கதரிசிகளின் போதனைகள் அவர்கள் வாழ்கிற வாழ்க்கையில் காணப்படவேண்டும்.

## 10. ஒரு தீர்க்கதரிசிக்கான நான்காவது சோதனை என்ன?

**எரேமியா 28:9.** *அந்தத் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே _______________, அப்பொழுது அவன் கர்த்தர் மெய்யாய் அனுப்பின தீர்க்கதரிசியாக விளங்குவான்.*

**குறிப்பு:** ஒரு மெய்த்தீர்க்கதரிசி பொய்யாக முன்னுரைக்க மாட்டார். ஒருவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தால், அவர் சொன்ன விஷயம் நிறைவேறும். ஆனாலும், அப்படியே நிறைவேறுவதால்மாத்திரம் ஒருவர் மெய்த்தீர்க்கதரிசி ஆகிவிட முடியாது. பொய்த்தீர்க்கதரிசிகள் சொல்கிற அடையாளங்கள் நடக்கலாமென்றும், அந்தச் செல்வாக்கை வைத்து வேறே தேவர்களைப் பின்பற்றும்படி மக்களை அவர்கள் தேவனிடமிருந்து வழிவிலக்கலாமென்றும் உபாகமம் 13:1–3இல் தேவன் எச்சரிக்கிறார். மெய்த்தீர்க்கதரிசி ஒருவர் வேதாகமத்தின்படியே தேவனைத் தொழுது கொள்வதற்கு மக்களை வழிநடத்தவேண்டும்.

## 11. தீர்க்கதரிசனம்பற்றி என்ன மூன்று விஷயங்களைப் பவுல் கட்டளையிடுகிறார்?

**1தெசலோனிக்கேயர் 5:20,21.** *தீர்க்கதரிசனங்களை அற்பமா____________________. எல்லாவற்றையும் _______________பார்த்து, நலமானதைப் _______________ கொள்ளுங்கள்.*

**குறிப்பு:** தீர்க்கதரிசனவரத்தை நாம் அற்பமாக எண்ணக்கூடாது அல்லது புறக்கணிக்கக்கூடாது என்று பவுல் சொல்கிறார். மாறாக, வேதாகமத்தை வைத்து, தீர்க்கதரிசியின் செய்தியைச் சோதிக்கவேண்டும்; உண்மையானதைப் பின்பற்றவேண்டும்.

## 12. ஒரு மெய்யான தீர்க்கதரிசியின் வார்த்தைகளைப் புறக்கணிக்கும்போது நாம் என்ன ஆலோசனையைப் புறக்கணிக்கிறோம்?

**லூக்கா 7:28–30.** *யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ... யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம்பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் _______________ _______________ தள்ளிவிட்டார்கள்.*

**குறிப்பு:** ஒரு மெய்த்தீர்க்கதரிசியின் வார்த்தைகளைத் தள்ளிவிடும்போது, தேவ ஆலோசனையைத் தள்ளுகிறோம். உன்னதமான ஓர் உண்மை இது! தேவனுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் வாக்குத்தத்தங்களுக்கும் செவிகொடுக்க வேண்டுமாம்; மெய்த் தீர்க்கதரிசியின் ஆலோசனைக்குச் செவிகொடுக்கும் யாவரும் செழிப்பார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. **2 நாளாகமம் 20:20.** "உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள்".

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

தேவன் இன்றும் தம் தீர்க்கதரிசிகள்மூலம் பேசுகிறார்; ஒரு மெய்த்தீர்க்கதரிசியின் வார்த்தைகள் உங்களுக்கான 'இயேசுவைப்பற்றின சாட்சியாக' இருக்கிறது. எனவே, இன்றைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை வேதாகமத்தோடு ஒத்துப்பார்ப்பீர்களா? அவை வேதாகமத்திற்கு ஒத்திருந்தால், அந்த ஆலோசனைக்குக் கீழ்ப்படிவீர்களா?

**பதில்:** ____________________________________________



# துணைப்பகுதி

**மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.**

## நவீன-காலத் தீர்க்கதரிசி

1844 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், மெத்தடிஸ்ட் சபையைச் சேர்ந்த வாலிபப் பெண்கள் சிலர் போர்ட்லண்டிலுள்ள மெய்ன் எனும் இடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். உடல்நலம் குன்றிய 17 வயது இளம்பெண்ணான எலன் ஹார்மோன் அப்போதுதான் தன் முதல் தரிசனத்தைப் பெற்றார். தேவன் தனக்கு வெளிப்படுத்தினதை, சபையில் எலன் சொல்லுவார். (ஒரு இளம் ஊழியரான ஜேம்ஸ் ஒய்ட் என்பவரைத் திருமணம் செய்தபின் அவர் எலன் ஒய்ட் என்று அழைக்கப்பட்டார்). எலன் தொடர்ந்து 70 வருடங்களாக அதாவது 1915 இல் மரிக்கும்மட்டும் தரிசனங்கள் மற்றும் கனவுகளை தேவனிடமிருந்து பெற்றார்.

வேதாகமத் தீர்க்கதரிசிகளைப் போலவே, எலன் ஒய்ட் தரிசனங்களைக் காணும்போதும் அவர் உடலில் அசாதாரண மாற்றங்கள் நிகழும். தானியேல் தீர்க்கதரிசிபோல, தரிசனம்காணும்போது அவர் சுவாசிப்பதில்லை; தரிசனம் ஆரம்பித்ததும் தன் உடல்வலிமையையெல்லாம் பெரும்பாலும் இழந்துபோவார். தானி 10:8,17. சில தரிசனங்கள் 4 மணி நேரம்கூட நீடிக்கும்; தரிசனம் முடியும்வரை சுவாசிக்க மாட்டார். அவர் தரிசனத்தில் இருந்தபோது அவரைச் சோதித்த மருத்துவர்கள் இது உண்மையெனச் சான்றிதழ் அளித்துள்ளார்கள்.

சில சமயங்களில், தெய்வீக பெலத்தையும் அவர் பெற்றிருக்கிறார். தானி 10:18,19. எலன் ஒய்ட்டின் உடல் எடை 95 பவுண்டுதான். ஆனால் தரிசனத்தில் இருந்தபோது, 17 பவுண்ட் எடையுள்ள குடும்ப வேதாகமத்தை 30 நிமிடங்கள் கைகளில் உயர்த்திப் பிடித்தவாறே நின்றிருக்கிறார். உடல் சார்ந்த இதுபோன்ற நிகழ்வுகள், ஒரு தீர்க்கதரிசியின் அனுபவத்தில் அசாதாரணமான விஷயங்கள் நடப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனாலும், இவற்றை வைத்து ஒருவர் தேவனுடைய தீர்க்கதரிசியா அல்லது சாத்தானுடைய தீர்க்கதரிசியா என்று சொல்லமுடியாது. ஏதாவது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தைக் காட்டி, தீர்க்கதரிசனவரம் இருப்பதாகச் சொல்லப்படும்போது, அது உண்மைதானா என்று வேதாகமத்தை வைத்துதான் சோதித்தறியவேண்டும்.

## வேதாகமத்தின் நான்கு சோதனைகள்

### முதல் சோதனை-வேதவாக்கியங்களோடு ஒத்திருக்கவேண்டும்

எலன் ஒய்ட்டின் ஏதாவது ஒரு புத்தகத்தை வாசியுங்கள்; அது வேதாகமத்திற்கு உங்களை வழிகாட்டும்; முற்றிலும் வேதாகமத்தோடு ஒத்திருக்கும். தன்னுடைய எழுத்துகளை வேதாகமத்தின் கூடுதல் வாக்கியங்களாக அவர் கருதினதில்லை. அவருடைய எழுத்துகளின் நோக்கமே தேவ மக்களின் நோக்கத்தை வேதாகமத்திற்குத் திருப்புவதும், சத்தியம் அடங்கிய ஒரே ஆதாரமாக வேதாகமத்தை நாடச்செய்வதும்தான் என்று எலன் ஒய்ட் உறுதியாகக் கூறியிருக்கிறார். "கோட்பாடுகளிலும் நடத்தை விதிகளிலுமிருந்து இன்று மக்கள் அதிகம் வழிவிலகிப் போகிறார்கள். விசுவாசத்தையும் கடமையையும் கட்டுப்படுத்துவது வேதாகமம் வேதாகமம் மாத்திரமே என்கிற புரொட்டஸ்டன்டின் உன்னத நியதிக்கு அனைவரும் திரும்பவேண்டியது அவசியமாகியிருக்கிறது".[1]

மேலும் அவர் "புதிய வெளிச்சத்தைக் கொடுப்பதற்காக அல்ல, ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட வேதாகமச் சத்தியங்களை இருதயத்தில் தெள்ளத்தெளிவாகப் பதியச்செய்யவே சாட்சியங்களை எழுதியுள்ளேன். மனிதன் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையும் சகமனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமையும் தேவவார்த்தையில் மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது; ஆனாலும் கொடுக்கப்பட்டுள்ள வெளிச்சத்திற்கு மிகச்சிலரே கீழ்ப்படிகிறீர்கள். கூடுதல் சத்தியம் எதையும் எழுதவில்லை; ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள மகா சத்தியங்களை சாட்சியங்கள்மூலம் தேவன் விளக்கமாகக் கூறியிருக்கிறார்; மக்களை விழிக்கச்செய்து, அவர்களின் மனதில் இவற்றைப் பதியவைக்கவும், எந்தச் சாக்குப்போக்குமின்றி மற்ற அனைத்தையும் விட்டுவிடச் செய்யவும் தாம் தெரிந்துகொண்ட விதத்தில் இவற்றைக் கொடுத்திருக்கிறார்"[2] என்று எழுதுகிறார்.

தன்னுடைய எழுத்துகளை வேதாகமத்தின் ஒரு பகுதியாகக் கருதக்கூடாதென்று எலன் ஒய்ட் உறுதியாக வலியுறுத்தினாலும் அவை ஆவியானவரால் ஏவப்பட்டவைதான். எலியா, எலிசா, யோவான் ஸ்நானன் போன்ற மகாதீர்க்கதரிசிகள் பலர் தேவனால் ஏவப்பட்டார்கள். ஆனால், வேதாகமத்தில் புத்தகம் எதுவும் எழுதவில்லை. பெரிய வெளிச்சமாகிய வேதாகமத்திற்கு வழிநடத்தும் ஒரு சிறிய வெளிச்சமாக எலன் ஒய்ட்டின் எழுத்துகளைச் சொல்லலாம். ஆவியால் ஏவப்பட்ட வேதாகம விளக்கவுரையாக அவை செயல்படுகின்றன; ஆனாலும் வேதாகமம்மாத்திரமே உச்ச அதிகாரத்தை உடையது.



### இரண்டாம் சோதனை- இயேசுவைப்பற்றிய சத்தியத்தைப் போதித்தல்

யுகங்களின் வாஞ்சை, கிறிஸ்துவின் விளக்கப்பாடங்கள், கிறிஸ்துவிடத்திற்கு வழி, ஆசீர்வாத மலையிலிருந்து பாடங்கள் போன்ற அவருடைய புத்தகங்கள் இந்தச் சோதனைக்கு முற்றிலும் ஒத்துப்போகின்றன. இந்தத் தொகுப்புகளில் அவர் தன்னைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை; இயேசுவைத்தான் முற்றிலும் சுட்டிக் காட்டியிருப்பார்.

### மூன்றாவது சோதனை- பயபக்தியான வாழ்க்கை

எலன் ஒய்ட்டின் மரணம்பற்றி செய்தி வெளியிட்டிருந்த பத்திரிக்கைகள், "திருமதி ஒய்ட்டின் வாழ்க்கை அனைவருக்கும் முன்மாதிரியான ஒன்று. அவர் கிறிஸ்துவின் தாழ்மையான அர்ப்பணிப்புமிக்க ஒரு சீஷி. சென்ற இடங்களிளெல்லாம் நன்மை செய்துவந்தார். மனித இனத்தின் நலனுக்காகவும் மேன்மைக்காவும் சுயநலமின்றி பாடுபடும் சான்றோர்களான பெண்களைப் பாராட்டும் அனைவருமே அவரை மரியாதையோடும் கனத்தோடும் கருதினார்கள். அவர் மதநம்பிக்கை மிக்க ஒரு தலைவர் என்பதையும் அவருடைய 90 வருட வாநாள்முழுவதும் நன்மைகள் செய்வதிலும், அன்பான வார்த்தைகள் பேசுவதிலும், மனித இனம் முழுவதிற்கும் ஜெபிப்பதிலும் நிறைந்திருந்தது என்பதை நினைவுகூருகிறோம்."[3]

### நான்காம் சோதனை- தீர்க்கதரிசனங்கள் சரியாக நிறைவேறுதல்

எதிர்காலம்பற்றி எலன்ஒய்ட்சில தீர்க்கதரிசனங்களே சொல்லியுள்ளார்; அவை நிறைவேறியுள்ளன. அவர் சொன்ன இந்தத் தீர்க்கதரிசனம் இன்றைய செய்தித்தாட்களை வாசிக்கும் உணர்வை நமக்கும் தரலாம். பெரும்பாலான நவீன பயணமுறைகள் நடைமுறைக்கு வருமுன்னர் சொல்லப்பட்ட செய்தி ஒன்றைப் பாருங்கள். "ரயில் விபத்துகள் அதிகரித்துக்கொண்டே இருக்கும். நெடுந்தூரத் தண்டவாளப் பயணங்களில் விபத்தும் மரணமும் எந்த எச்சரிப்புமின்றி உண்டாகும்."[4]

புகைப்பழக்கம் நுரையீரலுக்கு நல்லதென மருத்துவர்கள் சொல்லிவந்த ஒரு காலக்கட்டத்தில் எலன் ஒய்ட் வாழ்ந்தார். அதுபற்றிப் பல்வேறு மருத்துவக் கருத்துகள் நிலவினாலும் விஞ்ஞானப் பூர்வ நிரூபணம் எதுவுமில்லை. ஊட்டச்சத்துபற்றிய அறிவியல் அறிவு அப்போது கிடையாது. இந்தச் சூழ்நிலையில் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் பற்றி எலன்ஒய்ட் ஏராளம் எழுதியுள்ளார். ஊட்டச்சத்துத் சம்பந்தமாக எலன் ஒய்ட் எழுதியுள்ளவை மிகச்சரியாக இருப்பதாக கார்னல் பல்கலைக்கழகத்தின் ஊட்டச்சத்துத் துறையின் முன்னாள் பேராசிரியரான டாக்டர் க்ளைவ் மெக்கே உறுதிப்படுத்துகிறார்: "ஊட்டச்சத்துப் பற்றிய தற்கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கு வெகுகாலத்திற்கு முன்னரே எலன் ஒய்ட் அதுபற்றி எழுதியிருந்தாலும், இன்றைக்கு இருப்பதிலேயே மிகச்சிறந்த வழிகாட்டி அவருடைய எழுத்துகள்தாம்" என்கிறார்.[5]

கடைசி நாட்களில் தீர்க்கதரிசன வரம் காணப்படுமென்று வேதாகமம் முன்னறிவிக்கிறது. ஒரு மெய்யான தீர்க்கதரிசிக்கு வேதாகமம் சொல்லும் தகுதிகள் எலன் ஒய்ட்டுக்குப் பொருந்துவதாக ஆதாரம் தெரிவிக்கிறது. அவருடைய புத்தகங்கள் சிலவற்றைப் பெற்று, வாசியுங்கள்; 'தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்' எனும் வேதாகமத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள். 1தெசலோனிக்கேயர் 5:20,21.

1 The Great Controversy (Mountain View, CA: Pacific Press, 1950), p. 204, 205.

2 Testimonies for the Church (Mountain View, CA: Pacific Press, 1949), Vol. 2, p. 605.

3 Star (St. Helena, California), July 23, 1915.

4 Messages to Young People (Washington, DC: Review and Herald, 1930), p. 90 (reprinted from article in The Signs of the Times, April 21, 1890).

5 Clive M. McCay, "A Nutritional Authority Discusses Mrs. E.G. White," Review and Herald, February 26, 1959, p.10.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com